# இரட்டைக் காப்பியங்களில் கல்விச் சிந்தனை

**முனைவர் பா.முத்துச்சாமி, உதவிப் பேராசிரியர்,**

**தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி, சென்னை - 30**

4

**ஆய்வுச்சுருக்கம்**

இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் அந்தந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வியற் கூறுகளைபி படம் பிடித்துள்ளன. அவற்றில் கல்வி தொடர்பாகக் குறிக்கப்பட்டுள்ள செய்திகள் சமயங்களை அடியொற்றிக் காணப்பட்ட போதிலும் ஆசிரியர்கள் மாணவர்கள் எவ்வாறு இருக்கவேண்டும்? அவர்களுக்கான தகுதிகள் என்ன? என்பதைப் பற்றிய வரையறைகளைக் காட்டும் கல்வித் தொடர்பான செய்திகளை முதன்மைப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:**

கலைகள், அரங்கழ்கேள்வி, அறம், நடனம், அரங்கேற்றம், பரிசு, தலைக்கோல்

**முன்னுரை**

பழங்காலத்தில் கருத்துக்களை எடுத்துரைக்கும் பாங்கு, மக்கள் திரளாகக் கூடுமிடத்தில் கலைகள் வளர்ந்தன. கலைகள் தான் மனிதனது வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைந்து காணப்பட்டது என்பதனை உணர்ந்து செயல்பட்டனர். ஒவ்வொருவருக்கும் கற்றல் என்பது ஒவ்வொரு வகையில் சிறப்புடையதாக அமையும். அந்த வகையில் கற்றல் என்பது வெறும் ஏட்டுக் கல்வியோடு நின்று விடாமல் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் செம்மைப்படுத்தப்பட்ட வேண்டும். இக்கட்டுரையில் நாடகக் கல்வி, கேள்விக் கல்வி, அறக்கல்வி, நடனக் கல்வி, ஒழுக்க நெறிக் கல்வி மற்றும் பரிவும் பட்டமும் என்ற தலைப்பில் எடுத்தாளப்பட்டுள்ளது.

**நாடகக் கல்வி:**

பல்வேறு கருத்துக்களை எடுத்துரைப்பதில் நாடகங்களின் பங்கு மிகவும் முக்கியமானது. நாடகம் சிறப்புடன் அமைய நாடக அரங்கம் சிறப்புற அமைய வேண்டும். அப்போது தான் பார்வையாளர்கள் மகிழ்ச்சியும் மனநிறைவும் பெறுவார். அரங்கம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதை,

**'நாடகம் காப்பியம் நன்னூல் நுனிப்போர்'** என்பதன் வழி அறியலாம்.

**'தூண்நிழல் புறப்பட மான்விளக் கெடுத்தங்கு**
**ஒரு முக எழினியும் புரிந்துதான் வகுத்தங்கு'**

என நாடக மேடையானது, அரங்கிலுள்ள தூண்களின் நிழல் அரங்கில் விழாதபடிப் பொருத்தமான நிலையில் மாட்சிமைப்பட்ட விளக்குகள் எடுக்கப்பெற்றிருக்கும் என்று சிலப்பதிகாரம் சுட்டுகிறது.

நாடகக் கல்வியைக் கற்றுத் தேர்ந்தவர்களில் சிறப்பிடம் பெற்றவளாக மாதவி திகழ்கின்றாள். மணிமேகலை **'நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த**
**ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்**
**கற்றுத்துறைபோகிய பொன்தொடி நங்கை'**

என்று கூறுவது, நாடகம் என்பது பயிற்சியின் வாயிலாகவே நடைபெறக்கூடியது, பயிற்சியின்

விளைவாகக் கற்றல் என்பது செம்மையாக நடைபெறும் என்று குறிப்பிடுகிறது. ஆசிரியர்களின் துணைக்கொண்டு நாடகக் கல்வி கற்பிக்கப்பட்டுள்ளமையை அறியலாம். ஆசிரியர் என்னும் சொல் வழக்கில் இல்லாததால் அரங்கத்தாசிரியர் என்று நாடக ஆசிரியர் குறிக்கப்பெற்றுள்ளனர்.

**கேள்விக் கல்வி:**

கல்வி என்பது கேள்விகளை எழுப்பி அதற்கு விடை காணும் விதத்திலேயே இருந்திருக்கக் கூடும். கல்விக்கு அடித்தளமாக அமைவது கேள்வி கேட்டலாகும். மாணவர்களின் கேள்வியால் எழுந்ததே தொல்காப்பியம் என்பர். ஆசிரியர்கள் விரும்பி ஏற்கும் வகையில் மாணவர்கள் கேள்வி கேட்டு அதற்கு தக்க விடை காணும் ஆய்வில் ஈடுபட்டு உள்ளனர். அறத்தின் வழியாகத்துக் கேள்வியறிவு உடையவர்களாகத் திகழ்ந்தனர் என்பதை,

> **மறவனம் நீத்த மாசறு கேள்வி**
> **அறவணன் அங்கு அவன்பால் சென்றோளை'**

மணிமேகலையில் அறவண அடிகள் பாவு தன்னிக்கை துறந்து குற்றமற்ற கேள்வியுடையவராகப் புகழப்படுகிறார்.

**அறக் கல்வி:**

> **'நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்**
> **உரை மூதாளன் உறைவிடம் குறுகி'**

என்று கூறுகின்றனர். அறத்தை எடுத்துரைத்து அறத்தின் வழியாக நடப்பதும் நன்மை பெரும் வகையில் உயரிய சிந்தனையைத் தூண்டுவதாகவே கருதப்பட்டுள்ளது.

> **'சின்ன மாசு ஒழிந்து மனமாசு தீர்த்து ஆங்கு**
> **அறச்செவி திறந்து மறச்செவி யடைத்துப்**
> **பிரவிபி பிணி மருத்துவன்; இருந்து அறம் உரைக்கும்'**

மணிமேகலையில் புத்தர் மட்டுமல்லாது புத்த சமயத்தைச் சார்ந்த அனைவருமே அறத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், அதன்வழி நடக்க வேண்டும் என்னும் கொள்கை மாறாதவர்களாக விளங்கியமைக் காணலாம்.

**நடனக் கல்வி:**

நடனம் என்பது காப்பியக்காலம் தொடங்கி இன்றைய காலம் வரை பல்வேறு வேறுபாடுகளை கொண்டதாக இருந்து வருகிறது. இன்ப துன்ப நிகழ்ச்சிகளை பகிர்ந்து கொள்ளும் வகையில் நடனக்கல்வி அமைந்துள்ளது. நடனக் கல்வி என்பது ஆசிரியர்களுக்கு மிகவும் இன்றியமையாததாகும். மாணவர்களிடத்தில் கல்விச் சூழலுக்கு ஏற்ப நடனமாடிக் கற்பிக்கும் பொது உடல் அசைவுகளும் பாடல் வரிகளும் ஒருங்கே சேர்வதால், கற்றலில் மாணவர்கள் முழுமனதுடன் ஈடுபடுவார்கள். கூத்து என்னும் நிலையிலேயே நடனம் தொடங்கிப் பிற்காலத்தில் கல்விக்கும் அது பயன்பாடுடையதாக வளர்ச்சி பெற்றுள்ளது.

> **‘வேத்தியல் பொதுவியல் என்றிரு திறத்தின்**
> **ஆட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து'**

என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து நடனக் கல்வியின் ஒரு பிரிவாக இருந்துள்ளதைத் தெளிவாக

அறிய முடிகிறது. வேத்தியல் என்னும் நடனமானது அரசர்க்கு மட்டுமே உரியதாக இருந்துள்ளது.

**'நாட்டிய நன்னூல் நகு கடைபிடிக்க'**

வேத்தியல் பொதுவியல் என்னும் இருவகையான நாட்டிய நன்னூல்களையும் அறிந்து மரபு நெறி மாறாமல் நடனமாடியவள் மாதவி என்பதால் நடனக் கல்வியை, நன்கு அறிந்த பெருமைக்குரியவள் என்று இளங்கோவடிகள் காட்டுகின்றார். இக்கல்வியை மாதவி கற்றது பற்றி,

**'ஆடலும் பாடலும் அழகும் என்றிக்**

**கூறிய மூன்றின் ஒன்று குறைபடாமல்**

**ஏழாண் டியற்றியோர் ஈரா றாண்டில்'** என்கிறார் இளங்கோவடிகள்.

ஆடற் கலை, பாடற் கலை, அழகுக் கலை என்னும் மூன்றையும் குறைபடாமல் கற்றுத் தேர்தவற்குக் குறைந்தது ஐந்து வயது முதல் பன்னிரெண்டு வயது வரை அதாவது ஏழு ஆண்டுகள் ஆகியுள்ளன. நடனத்தைக் கற்றுத்தேற நல்ல நூல்கள் இருந்துள்ளமையால் நல்ல ஆசிரியர்களும் அக்காலத்தில் இருந்துள்ளனர் என்பதை அறியலாம்.

**ஒழுக்க நெறிக்கல்வி:**

ஆசிரியரை மதித்து வணங்கும் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள் என்னும் ஒழுக்க நெறி பழங்காலத்திலேயே இருந்துள்ளது. ஆசிரியரை வணங்கும் குறியீடாக அவருடைய பாதம் வணங்கிச் சிறக்கும் வழக்கம் இருந்துள்ளது.

**'ஆதி முதல்வன் அற ஆழி ஆள்வோன்**

**பாத பீடிகை பணிந்தனள் ஏந்தி'** என்று குறிப்பிடப்படுவதால் சமண, பௌத்த மரபில் இது ஒரு முக்கிய ஒழுக்கமாக இருந்துள்ளமை தெரியலாகிறது.

**கற்றலைச் செம்மைப்படுத்தலும் பரிசும்:**

கற்றலைச் செம்மைப்படுத்தல் என்பது மிகவும் இன்றியமையாததாகும். அதனடிப்படையில் செம்மைப்படுத்தும் வகையில் சிலப்பதிகாரம் மணிமேகலை போன்ற காப்பியங்கள் சிறப்பு வாய்ந்தவைகளான நடனம், நாடகம் போன்றவை தான் கற்ற கல்வியின் காட்சிகள் அரங்கேற்றம் செய்ததையும் அப்போது அங்கே ஆசிரியர்கள் மாணவர்களோடு கூடியிருந்ததையும் தெளிவாகக் காட்டுகிறார். பரிசும் பாராட்டும் நடனக் கல்வி சிறந்து விளங்கக் காரணமாக அமைந்துள்ளன.

**'தலைக்கோல் எய்தித் தலையரங்கேறி'**

என்று தலைகோல் என்னும் பட்டம் சிறப்புப் பட்டமாகக் கொடுத்து கௌரவிக்கப்பட்டது. இது நடனக் கல்வி வலுப்பெற்று விளங்கக் காரணமாக அமைகிறது. ஆசிரியர்கள் பல்வேறு செய்திகளை மாணவர்களுக்கு எடுத்துரைக்கும் போது மாணவர்கள் தங்களை வளப்படுத்திக் கொண்டு கற்றலைப் பற்றிச் சிந்தித்தனர். அதனால் கல்வி கொடுக்கும் ஆசிரியர்களைக் கடவுளாக எண்ணிப் போற்றினார்கள். ஆசிரியரை கணக்கர், சமயக் கணக்கர், உவாத்தி என்னும் பெயராலும் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். இரட்டைக் காப்பியங்களில் கல்விச் சிந்தனைகள் இருந்துள்ளமையை இதன்வழி காணமுடிகிறது. அவற்றில் சமயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் கல்வி தொடர்ந்துள்ளது என்பதை அறியலாகிறது.

**துணை நூல்கள்:**

1. மணிமேகலை

2. சிலம்பு .